மாவட்ட உரிமையியல் நீதிமன்றம். இலால்குடி.
அ.வ.எண். 93/2022
நாள். 18.08.2022

ஆகஸ்ட் – 18 ஆம் தேதி வாதி சாட்சியாக திரு. நபரின் வாக்குமூலம் (1989–ம் ஆண்டு 55 வது விதியின் 9 வது ஏற்பாட்டின்படி) திருமதி. S. தனலெட்சுமி, உதவியாளர் என்பவரது ஆணையீட்டால் உறுதி கூறப்படுகின்றது. பிரமாணம் செய்யப்படுகிறது.

======================================================================

| | |
|---|---|
| பெயர் = பாஸ்காமேரி | தகப்பனார் பெயர்= |
| கிராமம் = | தாலுக்கா = |
| சாதி = | சமயம் = |
| தொழில் = | வயது = 49 |

======================================================================

**PW 1 மு.வி**

நான் இவ்வழக்கின் 1ம் வாதி ஆவேன். எனது தரப்பு முதல் விசாரணைக்காக நிரூபண பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள சங்கதிகள் என்னால் சொல்லப்பட்டு நான் கையொப்பம் செய்துள்ளேன். கீழ்கண்ட ஆவணங்களை எனது தரப்பு ஆவணங்களாக தாக்கல் செய்கிறேன். அதனை ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

10.09.2021 தேதியிட்ட வழக்கு சொத்தை குறித்து ஜெபமாலை பெயரில்வ பதிவு செய்யப்பட்டுள்ள அ பதிவேடு கணினி நகல் வா.சா.ஆ.1, வழக்கு சொத்தை குறித்த பட்டா கணினி நகல் வா.சா.ஆ.2, 09.07.2015 தேதியிட்ட ஜெபமாலை வாதிகளுக்கு எழுதி கொடுத்த கிரையபத்திரம் அசல் வா.சா.ஆ.3, 12.06.2020 ஜெபமாலையின் இறப்பு சான்றிதழ் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.4, வழக்கு சொத்து குறித்து புலவரைபடம் வா.சா.ஆ.5, 06.02.2021 தேதியிட்ட கல்லக்குடி காவல் நிலைய போலீசார் கொடுத்த புகார் மனு இரசீது அசல் வா.சா.ஆ.6, எனது ஆதார் அடையாள

அட்டை அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட நகல் வா.சா.ஆ.7 ஆகும். தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.